# இதய தாகம் இருப்பார் வருக

இதய தாகம் இருப்பார் வருக
இதயம் குளிர ஈவேன் நிறைய
தாகம் இருப்பார் வருக
குளிர ஈவேன் நிறைய - 2

**1**
சுமந்து வந்திடும் சீலோத் தண்ணீர்
உமக்கு இருந்தும் உதவாதாகும்
உவந்து ஊற்றும் ஊற்றுத் தண்ணீர்
உவமையாகும் உரைப்பீர் உண்மை

**2**
பிறந்து வந்த பரமனிடம் வந்தே
திறந்து உள்ளம் நிறைவு கொள்வீர்
உடலின் தாகம் உலகம் அறியும்
உளத்தின் தாகம் எவரும் அறியார்

**3**
பொருளும் பொன்னும் போக்கா தாகம்
இதயம் தேடும் இறைவன் நானே
வருக வருக வளமாய் பெறுக
பெருகும் இன்பம் பெற்றே வாழ்க